
**திராவிடத்தால் வாழ்கிறோம்**

977

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

**கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்**

தமிழ்.கா.அமுதரசன்

24

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வு பூர்வமாக விவரிக்கும் தொடர்!

# கட்டாய தமிழ் கற்றல் : தகர்க்க முடியாத அடித்தளம்!



'தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ்தான் இல்லை என்ற நாணமுறும் நிலையைப் போக்க, நம் தமிழ்மொழியைப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் கட்டாயமாக கற்பதற்கான சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, அனைத்துப் பள்ளிகளிலும் இந்த ஆண்டிலேயே முதலாம் வகுப்பில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிப்பது தொடங்கும். இது வரும் ஆண்டுகளில் படிப்படியாகப் பத்தாம் வகுப்புவரை விரிவுபடுத்தப்படும்' என்றது, 2006-ஆம் ஆண்டு கலைஞர் கொண்டுவந்த கட்டாய தமிழ் கற்றல் சட்டம்.

அந்த அரசாணையின்படி, 2006-ஆம் ஆண்டிலிருந்து, அடுத்தடுத்த ஆண்டுகளில் ஒன்று, இரண்டு ஆகிய வகுப்புகளில் படிப்பவர்களுக்கு, தமிழ் கட்டாயப் பாடமாக இருக்கும். இவ்வாறு ஒவ்வோர் ஆண்டுக்கும், ஒவ்வொரு வகுப்புக்கு, தமிழ் கட்டாயப்பாடமாக நீட்டிக்கப்படும். அதற்கேற்ப சமச்சீர் பாடத்திட்டமும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இப்படி ஒவ்வொரு ஆண்டாக தமிழ் கற்கத் தொடங்கி, 2015-16-ஆம் ஆண்டில் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை அனைத்து வகுப்புகளுக்கும் தமிழ் கட்டாயப் பாட மாக்கப்பட்டு இருக்கும். இதுதான் சட்டத்தின் இலக்காக இருந்தது.

## நீதிமன்றப் படிக்கட்டுகள்

வழக்கம்போலவே, தமிழ்நாட்டில் தமிழ் கற்பதற்கான சட்டத்தை எதிர்த்து, தனியார் பள்ளிகள் கூட்டமைப்பு சார்பில், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை, அன்றைய தலைமை நீதிபதி ஏ.பி.ஷா, நீதிபதி டி.முருகேசன் அமர்வு விசாரித்து, தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும் என 23.08.2007 அன்று தீர்ப்பளித்தது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை ரத்துசெய்ய வேண்டும் என, தனியார் பள்ளிகள் சார்பில், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

அந்த வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அரிஜித் பசாயத், ஜே.எம்.பன்சால் ஆகியோர் கொண்ட அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. 'தமிழ்நாடு அரசு கொள்கை முடிவு எடுத்து, பள்ளிக்கூடங்களில் தமிழைக் கட்டாயப் பாடமாக்கும் சட்டத்தைக் கொண்டுவந்துள்ளது. இந்தச் சட்டம் செல்லும் என்று சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் தலையிட முடியாது. மேலும், அரசின் கொள்கை முடிவில், நீதிமன்றம் தலையிட முடியாது. இதுபோன்ற சட்டங்கள் கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா விலும் உள்ளன. எனவே, தமிழைக் கட்டாயப் பாடமாக்கும் தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும்' என்று 18.02.2008 அன்று தீர்ப்பளித்ததுடன், எதிர்த்தரப்பின் மனுவைத் தள்ளுபடியும் செய்தனர் நீதிபதிகள்.

“ஒரு மாநிலத்தின் மொழியை அந்த மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் அனைவரும் படிப்பது நல்லதுதான். இது நாட்டு ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் வழிவகுக்கும். உள்ளூர் மொழியைக் கற்பிக்க மறுப்பது நாட்டின் ஒற்றுமைக்கு நல்லதல்ல' என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பில் குறிப்பிட்டது.

வழக்கு நடைபெற்றுவந்த காலத்திலேயே, தனியார் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கும் பணியினை ஆய்வு செய்யவும் ஆணையிட்டார் கலைஞர். இப்படித்தான், தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ் கட்டாயப் பாடமாக்கும் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார் கலைஞர்.

அதன்மூலம், மெட்ரிக் பள்ளி மாணவர்கள் தமிழ்ப் பாடத்தைக் கட்டாயம் படித்து தேர்வு எழுத வேண்டும். இதேபோன்று, தமிழ்நாட்டில் உள்ள மாநில பாடத்திட்டம் அல்லாமல், வேறு பாடத்திட்டத்தில் கற்பிக்கும் எந்த ஒரு பள்ளியும் அங்குள்ள மாணவர்களுக்கு தமிழ்ப் பாடத்தைக் கற்பிக்க வேண்டும் என்ற நிலை உருவானது.

> “குறுக்கு வழிகளுக்கு தனியார் பள்ளிகள் முயன்றாலும், கலைஞர் அமைத்த அடித்தளத்தைத் தகர்க்க முடியவில்லை என்பதுதான் உண்மை.”

## நீண்ட கால கோரிக்கை

நீண்டகாலமாக தமிழ்நாட்டில் முன்வைக்கப்பட்டு வந்த கோரிக்கை, 1968-ஆம் ஆண்டில் அண்ணா முயற்சி செய்தது, அப்போதிலிருந்தே கலைஞர் நடத்திய சட்டப் போராட்டம் எல்லாவற்றுக்கும் தீர்வாக, 2006 தமிழ் கற்றல் சட்டம் அமைந்தது. குறிப்பாக, சட்டரீதியாகப் பல பின்னடைவு களுக்குப் பின்னர், வலுவான ஆதாரங்களுடன், நீண்ட சட்டப் போராட்டத்தின் விளைவாக சாத்தியமானது.

ஆனால், அதிலும் 2011-ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் பெரும் பிழையைச் செய்யத் தொடங்கியது, அம்மையார் தலைமையிலான அரசு. 2011-ஆம் ஆண்டு பதவியேற்றது முதலே பள்ளிக் கல்வியில் பல குழப்பங்களை உருவாக்கினார்.

'சமச்சீர் கல்விச் சட்டத்தை ஏற்க மாட்டோம்' என்கிற முடிவினை, தன்னிச்சையாக எடுத்து, அச்சிடப்பட்டு தயாராக இருந்த பாடப்புத்தகங்களைப் பள்ளிகளுக்கு விநியோகிக்கக் கூடாது என்று முடக்கினார். அதற்கு எதிராக, கழகத்தின் சார்பில் நீதிமன்றம் சென்று, சமச்சீர் கல்வியைச் சீர்குலைக்கக் கூடாது என நீதிமன்றத்தில் குட்டு வாங்கியது அம்மையார் அரசு. அதன்பின்னர், புதிய பாடப்புத்தகங்களை அச்சடித்துக் கொடுக்கப் போகிறோம் என்று, சுமார் மூன்று மாத காலம் மாணவர்களின் கற்றலை, கல்வியைப் பாழ்படுத்தினர். அதேபோன்ற நிலையைக் கட்டாய தமிழ் கற்றலிலும் ஏற்படுத்தினர்.

## தகர்க்க முடியாத அடித்தளம்

2014-ஆம் ஆண்டில், சென்னை உயர் நீதிமன்றம் சென்ற சில பள்ளிகள், 'சரியான கட்டமைப்பு வசதிகள் இல்லாததால், தங்கள் குழந்தைகளுக்கு தமிழ் கற்பிக்க முடியவில்லை. தவிர, தங்கள் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களில் பலர், அதற்கு முந்தைய வகுப்புகளில் தமிழை ஒரு பாடமாகப் படிக்கவில்லை என்பதால், அவர்கள் பத்தாம் வகுப்பில் தமிழ்ப் பாடத் தேர்வு எழுதுவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று முறையிட்டனர். இந்த விவகாரத்தில், அப்போதைய அ.தி.மு.க. அரசின் பதில் உறுதியாக இல்லாத தால், 2015-16ஆம் ஆண்டில் சில பள்ளிகளுக்கு மட்டும் தமிழ் கட்டாயப் பாடச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

அதேபோல், 2016-17ஆம் ஆண்டிலும் சில பள்ளிகளுக்கு சென்னை உயர் நீதிமன்றம் விலக்கு அளித்திருந்தது. அதன்பின், 2017-18-ஆம் ஆண்டில் மாணவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு முன்பே, சில தனியார் பள்ளிகளுக்கு அவற்றின் கோரிக்கையை ஏற்று, தமிழ் கட்டாயப் பாடத்திலிருந்து தமிழ்நாடு அரசு விலக்கு அளித்திருக்கிறது. பல ஆண்டுகள் போராடி, தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட்ட நிலையில், அதிலிருந்து ஒரு பிரிவினருக்கு விலக்களித்தனர். அப்போது வெளியிட்ட அரசாணையில், பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில், 2024-25-ஆம் ஆண்டிலிருந்து தமிழ்ப் பாடம் இடம்பெறும் என்று மாபெரும் பிழை செய்தனர். இதன்மூலம் தமிழ்நாட்டில் தமிழுக்கு மிகப்பெரிய துரோகத்தைச் செய்தவர்கள் இன்று எதிர்க்கட்சியாக வலம் வந்துகொண்டிருக்கின்றனர்.

ஆனால், 2006-ஆம் ஆண்டில் கலைஞர் கொண்டுவந்த கட்டாய தமிழ் கற்றல் சட்டத்தை தனியார் பள்ளிகளால் மறுக்க முடியவில்லை. இன்று, தமிழ்நாட்டில் எந்தப் பாடத்திட்டத்தின் கீழ் மாணவர்கள் படித்தாலும், தமிழ் கட்டாய பாடம் என்பது இன்றும் நீடிக்கிறது. அதில் குறுக்கு வழிகளுக்கு தனியார் பள்ளிகள் முயன்றாலும், கலைஞர் அமைத்த அடித்தளத்தைத் தகர்க்க முடியவில்லை என்பதுதான் உண்மை.

...தொடரும்

## அள்ளி வீசப்படும் அவதூறுகள்!

கரூரில் அரசியல் பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி, 41 பேர் உயிரிழந்த நிலையில், சம்பந்தப்பட்ட கட்சியின் தலைவர் பாதிக்கப்பட்டவர்களைச் சந்திக்காமல் சென்னைக்குத் திரும்பிவிட்டார். தமிழ்நாட்டின் முதலமைச்சர் நள்ளிரவில் கரூர் சென்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினார். வெளிநாடு சென்றிருந்த துணை முதல்வரும் உடனடியாக நாடு திரும்பி, பாதிக்கப்பட்டோரை நேரில் சந்தித்தார். ஆனால், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியுடன் முதல்வர் சென்னையில் எப்போதோ சந்தித்த படத்தைப் பகிர்ந்து, துயரத்தில் கூட சிரித்துக்கொண்டிருக்கிறார்கள் என அவதூறு பரப்பியது அ.தி.மு.க.-வின் இணையதள அணி.

சமூக வலைதளங்களிலும் எண்ணற்ற அவதூறுகளை, அரசை நோக்கி பலமுனைகளில் இருந்து அள்ளிவீசினர். தமிழ்நாடு அரசின் உண்மை சரிபார்ப்பகம் அவற்றை உடனுக்குடன் அம்பலப்படுத்தியுள்ளது. குறிப்பாக, 'கரூர் பேருந்து நிலைய ரவுண்டானா பகுதியில் அனுமதி கேட்டபோது, அது அனுமதிக்கப்பட்ட பகுதியல்ல என மறுத்த போலீஸ், வேலுசாமிபுரத்தை அ.தி.மு.க.வுக்கும், விஜய்க்கும் ஒதுக்கியது. ஆனால், அதே ரவுண்டானாவை தி.மு.க.வுக்கு மட்டும் ஒதுக்கியது எப்படி?' என்று அ.தி.மு.க. எம்.பி. இன்பதுரை சமூக வலைதளங்களில் பதிவிட்டிருந்தார். ஆனால், 'அவர்கள் அனுமதி கேட்டது லைட் ஹவுஸ் ரவுண்டானா, பேருந்து நிலைய ரவுண்டானா இல்லை' என விளக்கியுள்ளது தமிழ்நாடு அரசின் தகவல் சரிபார்ப்பகம்.

அதேபோல, 'கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த 39 பேருக்கு எப்படி இரவில் பிரேத பரிசோதனை செய்ய முடியும், 6 மணிக்கு மேல் பிரேத பரிசோதனை செய்யக் கூடாது' என்று விதிமுறைகள் இருப்பதாக சமூக வலைதளங்களில் பரப்பப்பட்டது. 2021 நவம்பர் 15-ஆம் தேதி ஒன்றிய சுகாதாரத்துறை வெளியிட்ட குறிப்புரையில், இரவு நேரங்களில் பிரேத பரிசோதனை செய்யலாம் என்று அதற்கான விதிமுறைகளை வகுத்துள்ளது. சட்டம் ஒழுங்குப் பிரச்சனை ஏற்படும் நிலையில், பிரேத பரிசோதனை செய்யலாம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும், தமிழ்நாடு அரசின் தகவல் சரிபார்ப்பகம் தெளிவுபடுத்தியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### கதிரவன் எனப் பெயர் சூட்டிய கலைஞர்!



கொ.மு.க.கதிரவன்

எனது தந்தை கொ.மு.கணேசன் அவர்கள், சேலம் மாவட்ட மாணவர் அணித் துணை அமைப்பாளராகவும், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்டத் துணை அமைப்பாளராகவும் நீண்ட காலம் செயல்பட்டவர். 1999-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் நாமக்கல் மல்லசமுத்திரத்தில் நடைபெற்ற தலைவரின் 76-வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில், மூன்று மாத கைக்குழந்தைகளாக இருந்த இரட்டையர்களான எனக்கும், எனது சகோதரருக்கும் தலைவர் கலைஞர் அவர்கள் கதிரவன், ஆதவன் எனப் பெயர் சூட்டினார். அப்போது எடுக்கப்பட்ட இந்தப் படத்தை, பார்க்கும்போதெல்லாம் எங்களுக்குப் பெருமையாக இருக்கும். தி.மு.கழகம் என்றென்றும் எங்கள் குடும்பக்கட்சிதான்.

– கொ.மு.க.கதிரவன்,
மாணவர் அணித் துணை அமைப்பாளர்,
மல்லசமுத்திரம் பேரூர், நாமக்கல் மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

**கருவூலம்**

### புகையில்லா வீடுகள்!

2007-ஆம் ஆண்டு, பொங்கல் அன்று ஏழை எளிய பிரிவினருக்கு இலவச எரிவாயு அடுப்பு, இலவச எரிவாயு இணைப்புத் திட்டத்தை, சென்னையில் தொடங்கிவைத்தார் முதலமைச்சர் கலைஞர். 661 கோடி ரூபாய் செலவில், 29 லட்சம் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், இந்தத் திட்டம் அமைந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131